# கோவில்பட்டி என்.இ.சி. கல்லூரியுடன் பெங்களூரு நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



விழாவில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பரிமாறிக்கொள்ளும் கே.ஆர்.கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மிஸ்ட்ரல் சொல்யூஷன்ஸ் நிறுவனர்– தலைவர் அனீஷ் அஹமத்.

**கோவில்பட்டி, செப். 16:** கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியில் (என்இசி), பெங்களூரு பெரு நிறுவனத்தின் 'மிஸ்ட்ரல் டெக்னோ ஃபேஷன்' என்ற மையம் வியாழக்கிழமை தொடங்கப்பட்டது.

கே.ஆர் கல்வி நிறுவனங்களின் நிறுவனர்– தலைவர் கே.ராமசாமியின் பிறந்த நாளையொட்டி நடைபெற்ற இம்மைய தொடக்க விழாவுக்கு, கே.ஆர் கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் கே.ஆர்.கிருஷ்ணமூர்த்தி, தாளாளர் கே.ஆர். அருணாச்சலம் ஆகியோர் தலைமை வகித்தனர். நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சண்மதி, நித்திஷ்ராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தலைமை விருந்தினரான பெங்களூர் மிஸ்ட்ரல் சொல்யூஷன்ஸ் நிறுவனர்– தலைவர் அனீஷ் அஹமத், விழாவைத் தொடங்கிவைத்தார். அந்நிறுவனத்தின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி ராஜீ ராமச்சந்திரா சிறப்புரையாற்றினார். நேஷனல் பொறியியல் கல்லூரியின் இயக்குநர் சண்முகவேல், முதல்வர் கே.காளிதாசமுருகவேல் ஆகியோர் பேசுகையில், மாணவர்கள் உள்ளூரிலேயே வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சியைப் பெறும் வகையில், பெங்களூரு மிஸ்ட்ரல் சொல்யூஷன்ஸ் நிறுவனத்துக்கும், இக்கல்லூரிக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது என்றனர்.

இதில், மிஸ்ட்ரல் சொல்யூஷன்ஸ் நிறுவன துணைத் தலைவர் விஜய் பாரத், தலைமை தொழில்நுட்ப வடிவமைப்பாளர் ராஜா சுப்பிரமணி, தலைமை திட்ட ஆலோசகர் பாண்டியராஜன் மற்றும் மாணவர், மாணவிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை கல்லூரியின் மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் துறைத் தலைவர் செண்பகவல்லி தலைமையில் ஒருங்கிணைப்பாளர்கள் பிரசன்ன வெங்கடேசன், விவேக் ஆனந்த் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.